**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 224/2021**

**வா.சா.2 – தமிழரசு**

**<u>20–01–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் வாதியின் மகன் என்றால் சரிதான். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. எனது அப்பா சொல்லி தான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எனக்கு வழக்கு விபரங்கள் தெரியும். எனது அப்பா சொல்லி தான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். 27.09.2021ல் பிரதிவாதிகள் எங்கள் பூமியில் வந்து பிரச்சினை செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த சமையத்தில் நான் அங்கு இருந்தேன் என்பதை தாவாவிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் இருந்தேன் என்பதை சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்திற்கு அருகே அக்கம்பக்கம் 10, 20 நபர்கள் இருப்பார்களா என்றால் இருப்பார்கள். அவர்கள் நான் சொல்லும் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அவர்களை ஏன் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அவர்களுக்கு இதில் அக்கறை இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. மேற்படி விபரத்தை வழக்கிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள பொய் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.20 17:11:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.